உ

சிவமயம்

# பள்ளத்தூர் அழகஞ்செட்டியார்

# தாலாட்டு.



விலை 0—2—

உ

*சிவமயம்*

# இரணிக்கோவிலார் ஏழு ஊர் ஆட்கள் கூடிப் படைக்கும் பள்ளத்தூர் அழகஞ் செட்டியார் பொதுப்படப்பை ராராட்டாக படித்தது,

கடியாபட்டி

மு. கரு. மு. முத்துவீரப்ப செட்டியார் மகள்

**ந. சோம. சுப. கண்ணம்மை ஆச்சி**

---

ஆவணித் திங்கள்
  அழகஞ் செட்டியார் படப்பை
யாரும் படித்ததில்லை
  ஆச்சிவிடக் கேட்டதில்லை
நாலு இசை வைத்து
  ராராட்ட வேணுமென்று
இரணிக் கோவிலார்
  பொதுப் படப்பு ஓவியத்தை
புகழுடனே நான் படிக்க
  விக்கினங்கள் இல்லாமல்
மூஷிக வாகன
  விநாயகரே காத்தருளும்
ராராட்டை நான் படிக்க
  நாவு தடுமாறாமல்

நல்ல சரஸ்வதியே
  நாவில் வர வேணுமம்மா
தலையரையே தொட்டி விட்டுத்
  தாலாட்டை நான் படிக்க
தாக்கல் தடுமாறுமல்
  ஸரஸ்வதியே வாருமம்மா
இப்படைப்பு ஓவியத்தை
  என்னுலே இயன்றமட்டும்
எங்கள் மகன் பிள்ளையற்கு
  என் கண்ணே எடுத்துரைப்பேன் தாலாட்டாய்
குற்றங்கள் நீக்கி
  உங்கள் குழந்தையைப்போல் பாவித்து
குணத்தை அனுசரிப்பீர்
  பொதுப் படைப்புத் தான் படைப்பார்
பூலகத்தில் ரொம்ப இருக்கு
  ஏழு ஊரார் கூடி இரணிக் கோவிலாட்கள்
பொதுப் படைப்புப் போல
  புவன மெங்கும் கண்டதில்லை
படைப்பு படைப்போர்கள்
  பட்டிணத்தில் ரொம்ப இருக்கு
பள்ளத்தூர் படைப்பதுபோல்
  பார் உலகில் கண்டதில்லை
வயசிலே மூத்தவர்கள்
  வார்த்தை சொல்ல கேட்டிருக்கேன்
வளமை தெரிஞ்சதினுல்
  மாமியார், காளியார்
மாது மணவாளர்
  அழகஞ் செட்டியார் எல்லோருமாக
எதவாய் வழிநடந்து
  இளம் பிள்ளைக் கொய்யவென்று

பில்லு வெட்டப் போகையிலே
பெரிய சோலை அருகிலே
அழகஞ் செட்டியார்
போய்மறைந்தார் கோவிலிலே
பெரியவுக காலத்தில்
இரணிக் கோவிலார்
பொதுப் படப்பைத் தான் படைத்தார்
ஏழு ஊரார் கூடி
இரணிக் கோவில் ஆட்கள்
பெரும் படப்புத் தான் படைக்க
புள்ளி பெருகுச்சாம்
பொன்னும் குவிந்ததாம்
அன்ன நடைப்பெண்டுகளும்
ஆண்மை உள்ள ஆடவரும்
செல்ல நடைப்பெண்டுகளும்
திரமை உள்ள ஆடவரும்
மாணிக்கம் போல் மைந்தர்களும்
இரணிக் கோவிலார்
மனக்கருத்து முள்ள
மந்திரி போல் ஆடவரும்
குயில் மொழிபோல் பொண்ணுகளும்
குணமான புத்திரரும்
கூடிப் படைக்கிறதும்
குறைகளொன்று மில்லாமல்
சேந்து படைக்கிறதும்
சிறப்பாய் நடக்கிறதும்
அழகஞ் செட்டியார் படப்பு என்று தென்னவெட்டு
பணியாரம் சுட்டு வைப்பார்
பெரிய அண்டாவில்
பாச்சோறும் பொங்கி வைப்பார்

பள்ளையச் சாதம்
பானையிலே தான் வடிப்பார்
நித்தம் விளங்க வென்று
ரெட்டை வீடு தனிலே
நிலவிளக்கு நாலெரியும்
நல்ல படப் பென்று
நாலு விளக் கெரியும்
சரியா விளங்குதென்று
சரவிளக்கு நின்னெரியும்
மின்சார விளக்கு
வெளியெல்லாம் மின்னலிடும்
புள்ளி தெரியவென்று
பேரெழுதும் சித்திரமும்
பங்கு தெரிய
பணிகாரம் தான் கொடுக்க
பணம் வாங்கும் ஓவியமும்
தொட்டிலவளை தொட்டிலவளை
அய்யனுர் மெல்லைகை
அழகஞ் செட்டியார் வளவில்
தொண்ணூறு தொட்டிலவளை
செல்வக் குழந்தைகளுக்குத்
தூக்கம் வரத்தாலாட்ட
தொட்டதெல்லாம் தொட்டிலவளை
அருமைக் குழந்தைகளுக்கு
அனந்தல் வரத் தாலாட்ட
அழகஞ் செட்டியார் வளவில்
அயிஞ்ஞூறு தொட்டிலவளை
முத்தத் தருகே
காளியார் வாசல்
மூன்னூறு தொட்டிலவளை

பூத்தெடுத்து தொட்டிகட்டி என் கண்ணே
அழகஞ் செட்டியார்
முடிமன்னர் பேரு சொல்லி
முறமை சொல்லி ராராட்டி
பட்டெடுத்துத் தொட்டி கட்டி
பாட்டனார் பேரு சொல்லி
பதமை சொல்லி ராராட்டி
அய்யாக்க தொட்டிலிலே
அனந்தல்வர ராராட்ட
சீயாக்க தொட்டியிலே
செல்வம் வர ராராட்ட
பேரு சொல்லி ராராட்டப்
பிள்ளை தந்தார் அய்யனார்
வளமை சொல்லி ராராட்ட
மஞ்சம் தந்தார் அழகஞ் செட்டியார்
கொஞ்சி விளையாட என் கண்ணே
குழந்தை தந்தார் அழகஞ் செட்டியார்
வச்சு விளையாட
மதலை தந்தார் காளியார்
அய்யனார் கோவில்
ஆலயமும் சென்று
அபிஷேகங்கள் செய்த உடன்
அழகஞ் செட்டியார் அபிஷேகங்கள்
சிறப்பாய் நடந்த பின்பு
தீத்தம். பிரசாதம்
அழகஞ் செட்டியார் வீடு வந்து
விபூதி காளாஞ்சி
வீடு வந்து சேர்ந்த உடன்
பக்கத்தே நின்று
பால் சாம்பிராணி புகையுமிட்டு

பாயை விரித்துப் பட்டுகளைப் பாரிச்சு
  மல்லிகைப் பூவை
வகையுடனே தான் சாத்தி
  முரியினுல் வாட்டி
முன்னுலே தானிருக்கும்
  இரணிக் கோவிலார்
ஏழு ஊர் ஆட்களுக்கு
  ஏழு வட்டி வைத்து
ஏழு வட்டி அதினிலே
  எதவாகச் சாதமிட்டு
வாழக்காய் கரிகளும்
  மரக்கரியும் தான் படைத்து
பருப்புடனே நெய் வார்த்துப்
  பள்ளையமும் தான் படைத்து
பாச்சோத்துப் பள்ளையம்
  பக்கத்தே தானிருக்கும்
பழநி விபூதி
  பானை இரண்டிருக்கும்
விபூதித் தட்டோடே
  சிகப்பு திருச்சொர்ணம் கிட்டருக்கும்
இதைக் காணவே வேணுமென்று
  கனசனங்கள் வந்திருக்கும்
தெண்டனிட வேணு மென்று
  ஜெகசனங்கள் வந்திருக்கும்
கும்பாபிஷேகம் போல்
  கூட்டம் ரொம்ப வந்திருக்கும்
மண்டலா அபிஷேகம் போல்
  மாஜனங்கள் வந்திருக்கும்
கும்பிட்ட பேர்களுக்குக்
  குறைகள் லெல்லாம் நீங்கிவிடும்

தெண்டமிட்ட பேர்களுக்குத்
தீவினைகள் நீங்கிவிடும்
கையெடுத்த பேர்களுக்கு
கவலையெல்லாம் நீங்கிவிடும்
குழந்தை தொட்டி கட்டுவதும்
கோடி ஜனம் வாரதுவும்
மதலை தொட்டி கட்டுவதும்
மாஜனங்கள் வாரதுவும்
பிள்ளை பிறக்க வென்று
பிரார்த்தனைகள் செய்பவரும்
பாலைங்க தொட்டிக்குப்
பணியாரம் தான் கொடுப்பார்
தொட்டிப் பணியாரமும்
தொன்னையிலே பாச்சோறும்
இரணிக் கோவிலார் .
தோதாக் கொடுக்கிறதும்
பொண்ணுக்கும் பொண்ணு
பேத்திக்கிப் பேத்தி
பேரனுக்கும் தேவி
புடிச்சுங்கும் இப்படப்பு
மாதுக்கு மாது மகபுள்ளை பேத்தி
மாது மருமகள் வருகிறதற்படப்பு
வருகும் ஜனங்களுக்கு
அழகஞ் செட்டியார் வாசல்
பெரிய வளவிடமும் பத்தாது
இன்னம் ஜனம் வந்தாலும்
இரணிக் கோவிலார்
எய்க்காமல் சோறிடுவார்
சகல ஜனங்களுக்கும்
சாப்பாடு செய்து வைத்து

வெத்திலை பாக்கி
விசிறிகளும் தான் கொடுப்பார்
பசித்து வருவோர்க்குப்
பசியமத்த வேணுமென்று
தவிச்சு வரும் பிராம்மணுளுக்குச்
சாதமிட வேணுமென்று
இரணிக் கோவிலார்
சத்திரமும் கட்டி வச்சார்
மருசாதி ஆட்களுக்கு
சாப்பாட்டு சீட்டு
தகுந்தபடி கொடுப்பார்
கார்வீடும் டைவர்களுக்கு
கலர்க் கொடுத்த சீட்டுத்தான்
மருசாதி ஆட்களுக்கு
வர்ணக் கலர் சீட்டுத்தான்
கேட்ட உடனே
கிட்ட நின்று தான் கொடுப்பார்
அட்டி ஒன்றும் சொல்லாமல்
அட்சணமே தான் கொடுப்பார்
டிக்கட்டைக் கண்டவுடன்
நேர்மை உள்ள சாப்பாடு
அச்செழுத்தைக் கண்டவுடன்
அத்தனை சாதிக்கும்
அன்னம் கரி குழம்பு
அள்ளியிட்டு நிற்பார்கள்
இந்தி மனுஷன்
எதிக்கை ஒரு பாராத்தான்
தமிழு மனுசன்
சரியான காவல்தான்
பின்கடவு உள்ளதெல்லாம்

பெலமான காவல்தான்
  எள்ளளவும் போகாமல்
அழகஞ் செட்டியார்
  எல்கையிலே காவல்தான்
இட்டலிச் சட்டி
  இருபது செட்டிருக்கும்
எண்ணிக்கை இல்லாமல்
  இட்டலிகள் ரெம்ப இருக்கும்
அதுக்குத் தகுந்தபடி
  சாம்பார் அண்டாவில் தானிருக்கும்
உப்புமா காப்பி
  ஓவியமாய் செய்திருக்கும்
பால் ஊத்தி தயிர் உரையும்
  பாதிச் சாம வேளையிலே
பலகாரம் தயாரிருக்கும்
  திங்கள் அடுத்த
செவ்வாய்க்கிழமை அன்று
  ஏழுமணிக்குக் காப்பி பலகாரம்
எதவாகத் தான் கொடுப்பார்
  பத்து மணி வரைக்கும்
பலகாரம் தான் நடக்கும்
  இல்லை யென்று சொல்லாமல்
எடுத்து வந்து வைப்பார்கள்
  மத்தியான சாப்பாடிற்கு
விசாரணைக் காரர் வந்து
  கறிவகைகள் ஆச்சா என்று
காரியமாய் மேல் பார்ப்பார்
  தாட்டெலையை போட்டு வைத்துக்
சரியாகப் பந்தி வைப்பார்
  பரீனையில் சாதமும்

பக்குவமாய்த் தானிருக்கும்
  கூட்டுக் கரிகளும்
குழம்பு வகை நேத்திகளும்
  சாம்பார் ஒவியமும்
தயிர்பச்சடி நேத்திகளும்
  பச்சடிகள் ஒவியமும்
பாயாசத் தித்திப்பும்
  வடையுடனே அப்பளம்
வர்க்க வகைகளும்
  மோர்க்குழம்பு ஒவியமும்
முறுக்கான சாப்பாடும்
  பொரிச்ச பொரிக்கரியும்
போஜனங்கள் ஒவியமும்
  வேதியர் சமையலும்
வெகு முறுக்குச் சாப்பாடும்
  நெருக்கடிகள் இல்லாமல்
நின்று விசாரிப்பார்
  தக்க புகழுடைய
தருமரெல்லாம் விசாரணைதான்
  வெத்தி புகழுடைய
வீமரெல்லாம் விசாரணைதான்
  மனுசா மனுசரெல்லாம்
அழகஞ் செட்டியார் படப்புக்கு
  விசாரணைக்கு வந்து நிற்பார்
மட்டமுள்ள ஆட்களும்
  மைனர்களும் பந்திவைப்பார்
இடவேளைக் காப்பி
  இரண்டு பலகாரமுண்டு
ஆறு மணிவரைக்கும்
  அருமையாய் தான் கொடுப்பார்

அடுத்தும் ஒரு பட்ப்பு
காளியார் ஆயாள் படப்பென்று
நித்தம் விளங்க வென்று
ரெட்டை வீடு தனிலே
நிலவிளக்கு நாலெரியும்
நல்லா விளங்க வென்று
நாலு விளக் கெரியும்
சரியாய் விளங்க வென்று
சரவிளக்கு நிண்ணெரியும்
பக்குவமாக பாச்சோரும் பொங்கிவைத்து
பானையில் சாதம்,
பதத்துடனே தான் வடித்து
பணியாரம் சுடுகிற
பாவினை தான் பெண்டுகளும்
பக்க நின்று பந்தி வைக்கும்
பாங்கான ஆண்பிளைகள்
பக்கத்தே நின்று
பால் சாம்பிராணி புகையுமிட்டு
சிகப்பு ஓலைப்பாய் விரித்து
சேலைகளைப் பாரிச்சு
காளியார் படப்பென்று
கண்டாங்கி பாரிச்சு
மல்லிகைப் பூவை
மகிரவே தான் சாத்தி
ஏழு ஊர் ஆட்களுக்கு
ஏழு வட்டி வைத்து
ஏழு வட்டி தனிலே
எதவாக சாதமிட்டு
வாழக்காய் கரியுடன்
வகையாகத் தான்படைத்து

பருப்புட்னே நெய்வார்த்துப்
பள்ளேயமும் தான் படைத்து
பாச்சோத்துப் பள்ளேயம்
பக்கத்தே தானிருக்கும்
விபூதித் தட்டோடே
திருச்சொர்ணத் தட்டிருக்கும்
கும்பிட்ட பேர்களுக்குக்
குறைகள் எல்லாம் நீங்கிவிடும்
தெண்ட நீட்ட பேர்களுக்குத்
தீவினேகள் நீங்கிவிடும்
கையெடுத்த பேர்களுக்குக்
கவலேயெல்லாம் நீங்கிவிடும்
நேரம் சுணங்காமல்
நெருக்கடிகள் இல்லாமல்
காலம் சுணங்காமல்
காளியார் படைப்பென்று
*விசாரணேக் காரர்*
கன சுருக்காய் சோறிடுவார்
புதன்கிழமை அன்று
காலேப் பலகாரம்
ஏழுமணிக்கு
எத்துவாய் கொடுக்கிறதும்
பத்துமணி நேரம்மட்டும்
பலகாரம் தான் நடக்கும்
மத்தியானச் சாப்பாடு
விசாரணேக் காரர் வந்து
மணியும் சுணங்காமல்
வாங்கவென்று பந்திவைப்பார்
வீடுவர வேணுமென்று
ஜனங்கள் வெகு சுருக்காய்ச் சாப்பிடுவார்

இடப்பகலைக் காப்பி
 இரண்டு பலகாரம் உண்டு
ஏழு மணிவரைக்கும்
 காப்பி பலகாரம்
எதவாய்க் கொடுக்கிறதும்
 ஏலங்கள் போடவென்று
அழகஞ்செட்டியாருக்கு
 ஏரம்ப பணம் சேர்க்கவென்று
இரணிக் கோவில் ஆட்கள்
 எல்லோரும் தானிருந்து
பாச்சோத்து அண்டா ஏலம்
 பணம் ஒசத்தி கேட்டோருக்கு
பாலாய் பெருகுமாம்
 பவனுய்க் குமியுமாம்
பாலன் பிறக்குமாம்
 மருந்த விலை கொடுத்து
மஞ்சள் எடுப்பவருக்கு
 மச்சம் குவியுமாம்
மஞ்சன் பிறக்குமாம்
 மனக்கிலேசம் நீங்குமாம்
ஒசந்த விலைகொடுத்து
 உப்பு எடுப்பவர்க்கு
ஒன்று, நூறுகுமாம்
 ஒசந்த பணம் சேருமாம்
உப்பாப் பொலியுமாம்
 சகல சாமானும் ஏலம் விட்டு
சுவாமிக்குப் பணம் சேர்த்து
 சகல ஜனங்களும்
சந்தோஷம் பேசி
 மங்களமாக

அவர்கள் மனை இடம் போய் சேருவார்கள்.
எழுதப் படிக்க
எனக்குத் தெரியாது
*நானு எடுத்து என் கண்ணே*
ராராட்டாதான் படித்தேன்
ஐயனுர் தன் கிருபை
அழகஞ்செட்டியார் தயவாலே
*காரியாத்தூரன் சம்மதத்தால்*
கடவுள் அனுக்கிரகம்
கவியாக அமைந்தது
பள்ளத்தூர் பொதுப் படப்பை
இரணிக் கோவிலார்
படைக்கும் வகை ஆட்களும்
படப்பு அதிசயத்தைப்
பார்க்க வருபவரும்
பாலனுக்குத் தொட்டி கட்டப்
பாங்குடனே வந்தவரும்
தனையர்களைத் தொட்டிலிட்டுத்
தாலாட்டை க் கேட்டவரும்
நல்ல படப்பென்று
நாவாலே சொன்னவரும்
கனஜனங்கள் அத்தினையும்
கண்ணாலே பார்த்தவரும்
நானென்று முன்னுக்கு
நாட்டமாய் நிற்பவரும்
வருகும் ஜனங்களை
வரவேற்க நின்றவரும்
வந்த மனுசாளுக்கு
வார்த்தை மொழி சொன்னவரும்
சமையலுக்குச் சாமான்

சரியாய் கொடுப்பவரும்
 சகல ஜனங்களுக்கும்
சமையல் செய்து வைப்பவரும்
 சலியாமற் பரிமாறும்
சரியான ஆட்களும்
 வேணுமென்று வேகமாய்
வேலை உழைப்பவரும்
 பொதுப் படப்பை தாலாட்டாய்
ஒங்கள் பொண்ணு படித்தவளும்
 மைக் உதவி செய்த
உங்கள் மாதுடைய புத்திரரும்
 ஆவணித் திங்களிலே
அழகஞ்செட்டியார் படப்பு
 அதிசயந்தான் என்றவரும்
அடுத்த நாள் செவ்வாயில்
 காளியார் படப்பு
காட்சிதான் என்பவரும்
 புதன்கிழமை அன்று
பொயிட்டு வருவோமென்று
 கும்பிட்டு விபூதி கோடி ஜனமெடுத்து
விபூதி பூசி வீடு வருபவரும்
 அத்தனைக்கும் மேற்பார்க்கும்
இரணிக் கோவிலார்
 ஆடவரும் ஆச்சிகளும்
ஆண்முதல் பெண்ணுவரை
 அத்தனை பேர்களும்
ஆல் போல் தழைத்து
 அருகது போல் வேரோடி
வாழ்வார் வளருவார்
 வற்றாய் வாழ்ந்திருப்பார்

மக்களுடன் செல்வமும்
    மனம்போலே வாழ்ந்திருப்பார்
மக்களுடன் செல்வாக்காய்
    மங்களமாய் வாழ்ந்திருப்பார்
இத்துடனே தாலாட்டை என் கண்ணே
    எதுவாய் முடித்திடுவோம்
பொதுப்படைப்பு ஓவியத்தை
    புகழுடனே ராராட்ட
வேணுமென்று அச்சிலிட்டோர்
    மென்மேலும் வாழ்ந்திருப்பார்
வேணுமென்று அச்சிலிட்டோர்
    மேன்மைபெற வாழியதே
நல்ல படைப்பை
    ராராட்ட வேணுமென்றே
நன்மையுடன் அச்சிலிட்டோர்
    நலம்பெற்று வாழ்ந்திருப்பார்
நன்மை என்று அச்சிலிட்டோர்
    நலம்பெறவும் வாழியதே

சுபம்

---

செந்தமிழ்ப் பதிப்பகம், புதுக்கோட்டை.